2023 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் இரண்டு 110 கே.வி. துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு அதாவது, சிலம்பிநாதன்பேட்டை ஊராட்சியில் 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தாழம்பட்டு ஊராட்சியில் 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, தமிழக மின் பகிர்மானக் கழகத் தலைவர் அலுவலகத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் சீரான மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்து உதவிடுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதியில் இரண்டு புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கி, அதில் ஒன்றில் ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி நடைபெற்று வருகின்றது. இன்னொன்று நிருவாக அனுமதி கோருகின்ற நிலையில் இருக்கின்றது. எனவே, வரக்கூடிய ஆண்டுகளில் இரண்டு துணை மின் நிலையங்களையும் அமைத்து, முழுமையாக பணிகள் நிறைவு பெறுவதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

திருத்தேர்

***21353—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2023 மார்ச் 28

(அ) திருவையாறு தொகுதி, கண்டியூர் அருள்மிகு பிரம்மசிரக்கண்டீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருத்தேர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கண்டியூர் அருள்மிகு பிரம்மசிரக்கண்டீஸ்வரர் திருக்கோயிலில் தற்போது கட்டு மரத்தேரில்தான் தேர் பவனி நடைபெறுகிறது. இரண்டு கிலோமீட்டர் அளவிற்கு நீளமுள்ள பகுதியில் கட்டு மரத்தேரில் சுவாமி நிலையை அடைகிறது. அந்தத் திருத்தேர் சுற்றி வருகிற பகுதி என்பது வெறும் 12 அடி கொண்ட குறுகிய சாலை என்பதால், அந்த 12 அடிக்குள் எந்த அளவில் தேர் செய்ய முடியுமோ அதை மர ஸ்தபதியை வைத்து ஆய்வு செய்து, அந்தக் குறுகலான பகுதியில் சுற்றி வருகின்ற தேரின் அளவை முடிவு செய்து, சாத்தியக்கூறு இருப்பின், நம்முடைய உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் கோரிய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய இரண்டு ஆண்டு பொற்கால ஆட்சியில், திராவிட மாடல் ஆட்சியில், இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் மூலமாக பல சிதிலமடைந்த கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு, திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. பல திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டு, தெப்பத் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. நந்தவனங்கள் சீரமைக்கப்பட்டு, மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. அதேபோல கோயில் திருமண மண்டபங்கள் அமைக்கப்பட்டு பணிகள்*

2023 மார்ச் 28]

நடைபெற்று வருகின்றன. அர்ச்சகர்களுக்கு இல்லங்கள் அறிவிக்கப்பட்டு, கட்டப்பட்டு வருகின்றன. திருத்தேர்களைப் பொறுத்தவரையில், பல கோயில்களில், பல்லாண்டுகளுக்கு முன்பு இருந்த கோயில்களுடைய திருத்தேர், மரத்தேர்கள் சிதிலமடைந்து இருக்கின்றன.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. துரை. சந்திரசேகரன்: *உதாரணமாக, என்னுடைய திருவையாறு தொகுதியிலுள்ள கண்டியூர் திருக்கோயிலிலிருந்த மரத் தேர், செந்தலை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலிருந்த பழமையான தேர், திருக்காட்டுப்பள்ளி அக்னீஸ்வரர் ஆலயத்திலிருந்த தேர் ஆகிய மூன்று தேர்களும் சிதிலமடைந்துவிட்டன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன வேண்டும்? என்ன வேண்டுமென்ற கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *அந்த மூன்று மரத் தேர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய செந்தலை பகுதியில் இருக்கின்ற சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருத்தேர் பவனிவரும் சாலை சற்று அகலமாக இருப்பதால், அத்திருக்கோயிலுக்குத் திருத்தேர் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அத்திருக்கோயிலில் ஏற்கெனவே இருந்த திருத்தேர் பல ஆண்டுகளுக்கு முன்பே சிதிலமடைந்துவிட்டது. அத்திருத்தேரின் எந்தப் பாகமும் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை. ஆகவே, செந்தலையிலிருக்கின்ற ஈஸ்வரன் திருக்கோயில் திருத்தேர் நிச்சயமாக அமைத்துத் தரப்படும்.*

அடுத்து, திருக்காட்டுப்பள்ளி அக்னீஸ்வரர் திருக்கோயிலுக்குத் திருத்தேர் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

கேட்டிருக்கிறார்கள். அத்திருத்தேர் பவனிவரும் சாலை குறுகிய சாலையாக உள்ளது. மேலும், தனியார் நிலங்களில் அதிகமான கட்டடங்களும் இருக்கின்றன. அந்தப் பகுதி கோயிலுக்குச் சொந்தமான பகுதியாக இருந்தால், சட்டப் பிரிவு எண் 78-ஐப் பயன்படுத்தி, அவற்றை அப்புறப்படுத்தி, சாலையை அகலப்படுத்தலாம். தனியார் பட்டா நிலம் என்பதால் அங்கு திருத்தேர் சுற்றி வருகின்ற சூழல் இல்லாத நிலையுள்ளது. தேவைப்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலுள்ள மக்களோடு பேசி முடிவுக்கு வந்தால், கட்டுமரத் தேர் கொண்டு செல்வதற்குண்டான வழிவகைகளை நிச்சயமாக இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி அமைந்த பிறகு, சுமார் 31 திருத்தேர்களை ரூ.21 கோடி செலவில் அமைத்துக் கொடுத்த அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற இந்த அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மூன்று திருக்கோயில்களின் திருத்தேர்களில், இரண்டு திருக்கோயில்களுக்கு திருத்தேர்கள் நிச்சயமாகச் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், நன்றி சொல்லி அமருங்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 59, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.